உ
சிவமயம்

# சிவபூமி

மாதாந்த செய்திப் பத்திரிகை
Monthly Journal of Sivapoomi

சிவம்–05 | சுபகிருது வருடம் ஐப்பசித் திங்கள் அக்டோபர் 2024 | பூமி–18






















# இணுவிலில் இலவச மருத்துவ சேவை நிலையம் திறந்து வைக்கப்பட்டது...

ஏழை மக்களின் நல்வாழ்விற்காக இலவச மருத்துவ சேவை நிலையம் 19.10.2024 காலை 9.00 மணிக்கு திறந்த வைக்கப்பட்டது. காங்கேசன்துறை வீதி, இனுவிலில் அமைந்துள்ள இவ் மருத்துவ முகாம் அமைந்துள்ள வீட்டினையும் காணியையும் சிவபூமி அறக்கட்டளைக்கு, கதிரித்தம்பி செல்லத்துரை, கனகசபாவதி ஆனந்தராசா கும்பத்தினர் அன்பளிப்பாக வழங்கி நீங்கள் ஏதாவது தர்ம காரியத்திற்கு இதனைப் பயன்படுத்துங்கள் என அன்பாக செஞ்சொற்செல்வரிடம் வேண்டிக் கொண்டனர். இதன் அடிப்படையில் அபயம் அறக்கட்டளையின் உதவியுடன் சிவபூமி அறக்கட்டளை ஏழை எளிய மக்களின் அடிப்படை மருத்துவ சேவையினை இலவசமாக வழங்கும் நோக்கில், இலவச மருத்துவ நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

# வாய்ப்புக்கள் நிறைந்த வட புலத்து சுற்றுலாத்துறையை திறம்பட பயன்படுத்த வேண்டும்


ஆசிரியர்
கலாநிதி. செஞ்சொற்செல்வர். ஆறு. திருமுருகன்

உதவி ஆசிரியர்
திரு. ச.சந்தோஷன்

வடிவமைப்பாளர்
திருமதி. ச. மதுஷா

வடக்கில் சுற்றுலாப் பயணிகளுக்கான பயண ஒழுங்குகள் பேணப்படுதல் அவசியமாகும். வடக்கிற்கு சுற்றுலாப் பயணிகள் வருகைதந்த வண்ணம் காணப்பட்டாலும் அவர்களுக்கான தங்குமிட வசதிகள், சுற்றுலாவிற்கான வழிகாட்டிகள் என்பன சரியான முறையில் அமைந்து காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சிவகங்கை என்ற கப்பல் யாழ்ப்பாணத்திற்கும் நாகப்பட்டினத்திற்கு இடையில் ஓடிக்கொண்டிருக்கின்றது. இருப்பினும் எதிர்பார்த்த அளவு இந்தியப் பணிகள் வருகை போதுமானதாக காணப்படவில்லை. கப்பலை பயன்படுத்தி இந்தியாவிற்கு செல்வோர்களின் எண்ணிக்கையும் குறைவாகவே காணப்படுகின்றது. இரண்டு விமானங்கள் பலாலி ஊடாக இந்தியாவிற்கு இப்பொழுது தினசரி பயணித்துக் கொண்டுள்ள போதும் இதுவரை ஆலயங்கள், புராதன வரலாற்றுச் சின்னங்கள், நெடுந்தீவு கோட்டை முதல் யாழ்ப்பாணத்தின் உடைய ஒல்லாந்தர் கோட்டை போன்றவற்றை சென்றடைவதற்கான சரியான பாதை காட்டுபவர்கள் அமையாத காரணத்தால் முந்தைய யாத்திரியர்கள் கூட நல்லூர் கந்தசாமி கோவிலை சென்றடைவதற்கு வசதியற்று வாகனங்களை கேட்டு கேட்டு விட்டு அவர்கள் தங்களுடைய பயணத்தை குறுக்கிக் கொண்டு திரும்பிச் செல்வதை அவதானிக்க முடிகிறது.

உண்மையிலே சரியான பயண முகவர்கள் இங்கே இருந்து பஞ்ச ஈஸ்வரத் தலங்களை அடிப்படையாகக் கொண்டு வடக்கிலே மிக முக்கியமான இடங்களை நல்லூர் கந்த சுவாமி கோவில் முதல் ஏனைய திருத்தலங்கள் உட்பட சுற்றுலா இடங்களை சுற்றிக் காட்டுவது அவசியமானது. அதோடு சுற்றுலா பயணிகள் அந்த இடங்களுக்கு வந்தாலும் அவர்களுக்கு அந்த கோவில்கள் பற்றிய வரலாற்று ஏடுகள் அந்த கோயில் சுற்றாடலில் கிடைப்பதாக இல்லை. இதன் காரணமாக கோவிலுடைய பெருமைகள், சிறப்புக்கள், அற்புதங்கள் என்பவற்றை அறிந்து கொள்ள முடியாத நிலையானது காணப்படுகின்றது. இந்தியாவிலேயே பெரும் கோவில்களின் வாசலிலே இருக்கின்ற பெரும்பாலான கடைகளில் அந்தந்த கோவில்களினுடைய சிறப்புக்கள் வரலாறுகள் பற்றிய கையேடுகள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. இவ்வாறான வசதி இங்கு கிடைக்காது. உதாரணமாக யாழ் கோட்டையின் முன் பகுதியில் உள்ள கடைகளில் யாழ்க்கோட்டை பற்றிய வரலாற்று கையேடுகள் ஏதுமே காணப்படவில்லை. வடக்கில் உள்ள மிக முக்கியமான இடங்களில் சுற்றுலா பயணிகள், யாரும் இல்லாத அனாதைகள் போல் இருக்கின்ற கட்டடங்களை பார்வையிட்டுச் செல்கின்றார்கள். சங்கிலி தோப்பு, மந்திரிமனை போன்ற பகுதிகளில் ஒன்றில் கூட அவற்றின் வரலாறுகள் ஆவணங்கள் காணப்படவில்லை.



வடக்கு மாகாணத்தில் சுற்றுலா விருத்தி காணப்பட வேண்டுமாயின் பயணிகளுக்கான சீரான விளக்கங்களுடன் கூடிய கையேடுகள் உருவாக்கப்பட வேண்டும். அதோடு சுற்றுலா பிரயாணிகளை சுற்றிக்காட்டக் கூடிய இளைய தலைமுறை வழிகாட்டிகளுக்கான பயிற்சி பட்டறைகளை அமைத்தல் மூலமும் ஒரு கட்டுக் கோப்பில் சுற்றுலாப் பயணத்தை நடாத்த திட்டமிடல் வேண்டும். இதனை வடக்கிலுள்ள அரச அதிகாரிகள், சமூக ஆர்வாளர்கள் என்போர் கவனத்தில் கொள்ள வேண்டும்.

கலாநிதி. செஞ்சொற்செல்வர்.
ஆறு. திருமுருகன்

# ஈழத்தில் அறப்பணிகள் ஆற்றும் அபயத்தின் ஆண்டுவிழா லண்டனில் சிறப்பாக நடைபெற்றது





சிவபூமி அறக்கட்டளை ஊடாக வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் உள்ளிட்ட ஈழத் திருநாட்டில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறு வகைகளில் அபயம் அறக்கட்டளை, மனிதாபிமான உதவிகளை மேற்கொண்டு வருகின்றது.

தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் தலைவர் செஞ்சொற்செல்வர் அவர்கள், அபயம் அறக்கட்டளையின் ஆண்டு நிறைவு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.

செஞ்சொற்செல்வருடன் மிக நெருங்கிய உறவைக் கொண்டுள்ள அபயம் அறக்கட்டளையும் அதன் பணியாளர்களும் விடுத்த அன்பான அழைப்பினை ஏற்று, லண்டன் நகரில் நடைபெற்ற அபயம் அறக்கட்டளையின் ஆண்டு விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.


அபம் அறக்கட்ளை ஈழுத்தமிழ் மக்களுக்கு வழங்கி வரும் மனிதாபிமான உதவிகளுக்கு தனது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டார்.











# ஈழத்தின் இசை மேதை வீரமணி ஐயர்



ஈழத்து இசையை தனித்துவமாக இன்று கதைக்கின்றோமென்றால் இதற்கு முக்கிய காரணகர்த்தாவாக இருப்பவர் வீரமணி ஐயர் எனும் இக்கலைஞர் தான். இவரது ”கற்பகவல்லி நின் பொற்பதம்” என்ற பாடல் நம் ஈழத்து மக்களிடையே மட்டுமல்லாது உலகளவில் கொண்டிருக்கும் பிரபல்யமொன்றே இதனை சான்று பகர போதியதாகின்றது.

இவர் ம.த.நடராஜ ஐயர் க்கும் சுந்தராம்பாள் அம்மையாருக்கும் இரண்டாவது மகனாக 1931 அக்டோபர் 15 தமிழ்ப்பிரசித்தி பெற்ற இணுவில் கிராமத்தில் பிறந்தார்.

இவர் சிறுவயதுக் கல்வியை இணுவில் சைவப்பிரகாச வித்தியாலயத்திலும் (இன்றைய இணுவில் இந்துக் கல்லூரி) உயர் கல்வியை மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் கற்றார். கல்லூரி படிப்பை நிறைவு செய்துகொண்டு மேல் படிப்புக்காக இந்தியா சென்ற இடத்தில், இசை, நடனம், நாடகம் என்பனவற்றால் கவரப்பட்டு, திருமதி ருக்மணிதேவி அருண்டேலிடம் பரதநாட்டியமும், எம். டி. ராமநாதனிடம் இசையையும் கற்றுக்கொண்ட இவர், பாபநாசம் சிவன் அவர்களை தனது சாகித்ய குரு ஆக்கி கொண்டார்.



பின்னர் கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் விரிவுரையாளராக இணைந்துகொண்டு தனது இசைப்பணியை ஈழத்துக்கு ஆற்றத்தொடங்கினார். இவரது இப்பணியில் ஏராளமான இசை,நாட்டிய ஆசிரியர்களும், ஏராளமான சாகித்யங்கள், நாட்டிய நாடகங்கள், ஆலயங்கள் மீதான பாடல்களும் அடங்கும்.

“கற்பகவள்ளி நின் பொற்பதங்கள்” என்னு பாடல் பாட ஒரு கதை உண்டு. இவர் இந்தியாவிலே கற்றுக்கொண்டு இருந்தபோது தன் மேற்படிப்பிற்காக பணம் தேவைப்பட்டது. வழமையாக பணம் அனுப்பும் அண்ணனும் அனுப்பவில்லை. அடுத்தநாள் 12 மணிக்குள் பணம் செலுத்தி ஆக வேண்டும். மிகவும் மனமுடைந்தவர் கபாலீஸ்வரர் ஆலயத்தில் மனமுருகி இயற்றிய பாடலே “கற்பகவள்ளி நின் பொற்பதங்கள்” ஆகும்.இந்த பாடலை கேட்ட பின் மகானின் திறமையை மெய்ச்சிகலாச்சேத்திரா ஆசிரியர்கள் இவருக்கு மேற்படிப்புகளை இலவசமாகவே கற்பித்தனாராம்.

பலாலி ஆசிரியர்கலாச்சாலையில் கற்பித்த காலத்தில் பக்கத்தில் தோட்டம் காணப்பட்டது.அங்கு வெங்காயச்செய்கையில் சில பெண்மணிகள் ஈடுபட்டு வந்தனர்.அவர்கள் வெங்காயம் விதைத்து அதை பிடுங்கி கூடையில் போட்டு தலையில் சுமந்து நடைபயிலும் காட்சி இவரை நன்றாக கவர ஒரு முறை அவர்களை பார்த்தவண்ணமே மனதுக்குள் பாடல்வரி எழுதிமெட்டுப் போட்டபடி நடந்து சென்று மின்கம்பத்தில் மோதி நெற்றியில் சிறு காயத்தோடு வீடு திரும்பினாராம். அதன் பின் அப்பாடலை மாணவர்களுக்கு கற்பித்து மேடையேற்றி வெற்றியும் கண்டார். இச்சம்பவம் இவர் கலைமேல் எவ்வளவு மயக்கம் கொண்டிருதார் எனபதற்கு எடுத்துக்காட்டு ஆகும்.



ஒரு முறை ஒரு தலைப்பில் நான்கு கதைகள் எழுதவேண்டி சந்தர்ப்பம் ஏற்பட்டது.ஒரே தலைப்பில் நான்கு கதைகள் எழுதுவது என்பது இலகுவான காரியம் அல்ல.ஒருவாறு மூன்று கதைகள் எழுதிவிட்டார். நான்காவது கதை நீண்டநேரம் ஜோசித்தும் வரவில்லைஉடனே வேட்டியை மடித்து "சண்டி கட்டு" கட்டிய படி ஜோசித்தவாறே பரராஜசேகரப்பிள்ளையார் ஆலய வீதியால் நடந்து சென்றார். வீதியில் சென்ற இளைஞன் "என்ன் ஐயா ஜோசனை" என்று கேட்ட "ஒண்டு இல்லையடா மோனே" என்று சொல்லி விட்டு உடனே வீடு திரும்பி நான்காவது கதையையும் எழுதி முடித்தாராம். அதன் பின் நான்கு கதைகளுக்கும் பரிசு கிடத்ததாம்.



மேலும் இவர் பேச்சிலே குறும்புதனமும்,குழந்தை தனமும் மிக்கவராக காணப்பட்டார்.அயல்வீட்டு சிறு பிள்ளைகளுக்கு இலவசமாக சங்கீத,நடன வகுப்புகள் கற்றுக்கொடுப்பார்.கிருஷ்ணரே இவருக்கு பிடித்த தெய்வமாகும். நெற்றியில் நாமத்துடன் கோவில் வீதியில் அடிக்கடி தென்படுவார். வைகுண்ட ஏகதசி வேளையில் இசைகச்சேரி செய்வார் ஆலயத்தில்.மேலும் தன்னிடம் கற்கவரும் மாணவர்களை தன் பிள்ளை போல நினைத்து கல்வி ஊட்டுவார். சிறுவர்,சிறுமியர் மீது அன்பாக பேசி பழகுவார்.

எம் அம்மா சிறுமியாக இருந்த காலத்தில்ஆலயத்த்தி கிருஷ்ணருக்கு பூசை செய்தபின் நெற்றியில் அனைவருக்கும் நாமம் தருவித்து "அடி பிள்ளை நல்லா இருடி நல்லா இருடி" என்று ஆசி கூறுவாராம். என் அன்னை அடிக்கடி இன்றும் உச்சரிக்கும் பெயர் வீரமணி ஐயர். இவ்வளவு காலம் சென்றும் என் அன்னை வீரமணி ஐயர் மேல் இவ்வளவு மதிப்பு வைத்திருக்கிறார் என்றால் அவர் எவ்வளவு பேரைஅன்பால் சம்பாதித்து இருக்கினறார் என்பது கண்கூடு.

## இவரது பெற்ற பட்டங்களும் விருதுகளும்:

கர்நாடக இசை, நடனம் ஆகிய இரண்டிலும் டிப்ளோமா (Diploma in Dance & Music)
"சாகித்ய சாகரம்" பட்டம் - கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
"கவிமாமணி" பட்டம் - வட இலங்கை சங்கீத சபை
"இயலிசை வாரிதி" பட்டம்
"மகாவித்துவான்" பட்டம்
"கௌரவ முதுமாணி" (எம்.ஏ) பட்டம் - யாழ் பல்கலைக்கழகம்

இவ்வாறு பல சிறப்புக்கள் பெற்ற வீரமணி ஐயர் அவர்கள் 04.10. 2003 அன்று இறைவனடி சேர்ந்தார். அவரது 21வது நினைவு தினத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது. அவரது மகிமைகளையும் பெருமைகளையும் தலைமுறைகள் கடந்து நிலைபெறச் செய்வோம்.

# திருச்செந்தூரில் இந்த ஆண்டும் செஞ்சொற்செலவரின் சிறப்பு ஆன்மீக உரை இடம்பெறுகிறது




முருக கடவுள் தேவசேனாதிபதியாக வடிவெடுத்து, தீமையின் வடிவிலான, சூர பத்மனை சம்ஹாரம் செய்த புகழ்பெற்ற ஆறுபடை வீடுகளில் ஒன்றாக திருச்செந்தூர் முருகன் ஆலயத்தில், வரும் 02.11.2024ம் திகதி தொடக்கம் 6 நாட்கள் நடைபெறவுள்ள கந்தசஷ்டி விரத நாட்களில் செஞ்சொற்செல்வரின் விசேட சொற்பொழிவு வழமை போல் இந்த ஆண்டும் நடைபெறவுள்ளது. இலங்கையில் இருந்து ஒரு தமிழனின் குரல் முருகப் பெருமானின் திருத்தத்தில் ஒலிக்கவுள்ளது.

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயில் முருகனின் ஆறுபடை வீடுகளில், இரண்டாம் படை வீடாகத் திகழ்கின்றது. இது தமிழ்நாடு மாநிலத்தில், தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூரில் அமைந்துள்ளது. இத்திருத்தலம் 2000-3000 ஆண்டுகள் முற்பட்டதாகும். இத்திருத்தலம் முருகப்பெருமானுக்குக் கடற்கரை ஓரத்தில் அமைந்துள்ள ஒரு கோயிலாகும். இக்கோயில் அமைந்துள்ள இடம் திருச்சீரலைவாய் என சான்றோர்களால் அழைக்கப்பட்டது. 157 அடி உயரம் கொண்ட இக்கோயிலின் கோபுரம், ஒன்பது ஸ்தலங்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. முருகப்பெருமான் சூரனை ஆட்கொண்ட பின்பு, தனது வெற்றிக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக இத்தலத்தில் சிவபூஜை செய்தார். இந்த கோலத்திலேயே முருகன் வலக்கையில் தாமரை மலருடன் அருள்கின்றார். தலையில் சிவயோகி போல ஜடாமகுடமும் தரித்திருக்கிறார்.திருச்செந்தூர் முருகன் சன்னதியின் மேற்கு திசையில் இராஜகோபுரம் இருக்கிறது. முருகப்பெருமான் இத்தலத்தில் கடலைப் பார்த்தபடி, கிழக்கு நோக்கி காட்சியளிக்கிறார். மேற்கு கோபுரம் சுவாமிக்கு எதிரே, கிழக்கு திசையில்தான் அமைத்திருக்க வேண்டும். ஆனால், அப்பகுதியில் கடல் இருப்பதால் மேற்கில் கோபுரம் கட்டப்பட்டுள்ளது.

இத்தகைய சிறப்புக்கள் கொண்ட திருத்தலத்தில் வரும்
02.11.2024ம் திகதி நண்பகல் 1.00 மணிக்கு மிடலுடைத் தூதன் எனும் பொருளிலும்,
03.11.2024ம் திகதி நண்பகல் 1.00 மணிக்கு மந்திரம் சொல்லும் மந்திரம் எனும் பொருளிலும்,
04.11.2024ம் திகதி நண்பகல் 1.00 மணிக்கு அடியார்க்கு அருளிய முருகன் எனும் பொருளிலும்,
05.11.2024ம் திகதி நண்பகல் 1.00 மணிக்கு மறை இறைஞ்சும் சேவடி எனும் பொருளிலும்,
06.11.2024ம் திகதி நண்பகல் 1.00 மணிக்கு வடிவான் வடிவேலன் எனும் பொருளிலும்,
07.11.2024ம் திகதி காலை 11.00 மணிக்கு பிஞ்சிலே பழுத்தாலும் துவர்ப்பு இல்லை எனும் பொருளிலும் சிறப்புரையாற்றவுள்ளார்.



# யாழ்ப்பாணத்தில் சிறப்புற நிகழ்ந்த அனைத்துலக தமிழியல் ஆய்வு மாநாடு




யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொன்விழா நிகழ்வு வரிசையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கச் சர்வதேச ஆய்வரங்கின் (JUICE) ஒரு பகுதியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை தனது ஐந்தாவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாட்டை அதன் பொன்விழா ஆண்டில் “இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம்: இலக்கியத்தினூடான மானுட விடுதலை“ என்ற தொனிப்பொருளில் முன்னெடுக்கிறது. மானுட விடுதலை தொடர்பில் இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியங்களின் பங்களிப்பினை பல்வேறு நோக்கு நிலைகளில் ஆய்வு செய்வதும் மதிப்பீடு செய்வதுமே அதன் நோக்கங்களாகும்.

தமிழியல் ஆய்வு மாநாட்டின் தொடக்க நிகழ்வுகள் 07.10.2024 அன்று காலை 09.00 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கைலாசபதி கலையரங்கில் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர். கிருஷ்ணபிள்ளை விசாகரூபன் தலைமையில் நடைபெற்றது.



## ஆய்வுக்கட்டுரைகள்

இம்மாநாட்டுக்கான ஆய்வுக்கட்டுரைகள் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், ஆர்வலர்கள் முதலானோரிடமிருந்து கோரப்பட்டிருந்தன. ஆர்வத்துடன் பலர் இம்மாநாட்டுக்கான கட்டுரைகளை அனுப்பி வைத்திருந்தனர். இந்தியா, டென்மார்க் முதலான நாடுகளிலிருந்தும் ஆய்வுக்கட்டுரைகள் கிடைக்கப்பெற்றிருந்தன.

கிடைக்கப்பெற்ற நாற்பத்தெட்டு (48) ஆய்வுக்கட்டுரைகளும் உரிய முறைப்படுத்தலூடாக துறைசார் நிபுணத்துவம் உடையவர்களால் மதிப்பீடு செய்யப்பட்டன.

அவற்றுள் மதிப்பீட்டாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட முப்பத்தெட்டு (38) ஆய்வுக்கட்டுரைகள் மட்டும் ஆய்வுக்கட்டுரைத் தொகுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வுக் கட்டுரைகள் பேராசிரியர். சு. வித்தியானந்தன் அரங்கு, இலங்கையர்கோன் அரங்கு, மஹாகவி அரங்கு, டானியல் அரங்கு என நான்கு அரங்குகளில் அளிக்கை செய்யப்பட்டன.

## மூத்த படைப்பாளுமைகளுக்கான கௌரவம்



ஈழத்து இலக்கியப் பாரம்பரியத்தில் பல்வேறு புலங்களில் கோலோச்சி வருகின்ற புலமையாளர்கள் சிலரை இனங்கண்டு, அவர்கள் இம்மாநாட்டில் கௌரவிக்கப்படவுள்ளனர். உயராளுமைக்கான கௌரவத்தினைப் பேராயர். வண. கலாநிதி. எஸ். ஜெபநேசன் அவர்களும், படைப்பாளுமைக்கான கௌரவத்தினை மூத்த மரபுக் கவிஞர் சோ.



பத்மநாதன் (சோ. ப) அவர்களும் மூத்த எழுத்தாளருக்கான கௌரவங்களை குந்தவை (இரா. சடாச்சரதேவி), அ. யேசுராசா மற்றும் ஐ. சாந்தன் ஆகியோரும் பெறவுள்ளனர்.

## பல்கலைக்கழகத்துக்கும் சமூகத்திற்குமிடையிலான ஊடாட்ட நிகழ்வுகள்

தமிழ்மொழியை மீதான ஈடுபாட்டையும் இலக்கியப் பரிச்சயத்தையும் பரவலடையச்செய்யும் நோக்கில் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடம் உள்ளிட்ட பிற பீட மாணவர்களிடையே தமிழறிவுப் போட்டிப் பரீட்சையையும், வடக்கு மாகாணத்தின் பன்னிரண்டு வலயங்களிலுள்ள பாடசாலைகளின் உயர்தர வகுப்பு மாணவர்களிடையே பேச்சுப்போட்டி, தமிழறிவுப் போட்டிகளையும் இம்மாநாட்டின் இணை நிகழ்வுகளாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.



## முப்பெரும் விழா

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் கலைப்பீடமும் அப்பீடத்தின் ஓர் அங்கமாகிய தமிழ்த்துறையும் தமது ஐம்பதாவது ஆண்டுகளை நடப்பாண்டில் நிறைவுசெய்துள்ளன. அவ்வகையில் இவற்றின் பொன்விழாக் கொண்டாட்ட வரிசையில், இரண்டாம் நாள் நிகழ்வினை "முப்பெரும் விழா" என்ற தலைப்பில் கவிதா நிகழ்வு, நடன அரங்கு, தமிழிசை அரங்கு, கூத்து அரங்கு என்றவாறாக ஒழுங்கமைத்தனர்.

இப்பல்கலைக்கழகத்தின் மேனாள் துணைவேந்தர் அமரர். பேராசிரியர். சு. வித்தியானந்தன் அவர்கள் ஈழத்தின் பாரம்பரியக் கூத்துக்களை மீளுருவாக்கம் செய்வதில் மிகுந்த அக்கறை உடையவராக விளங்கினார்.

அவரின் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் யாழ்ப்பாணப் பிரதேசங்களில் இன்றும் உயிர்த்துடிப்புடன் வழங்கி வருகின்ற ஈழத்தின் தென்மோடிக்கூத்தின் செழுமையினை வெளிக்கொணரும் வகையில் "காத்தான் கூத்து" இம்முறை இங்கு மீளவும் மேடையேற்றப்பட்டமை சிறப்பிற்குரியதாகும்.

## புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்

இம்மாநாட்டினையொட்டி தமிழியல் ஆர்வலர்கள் மற்றும் பல்கலைக்கழக சமூகம் பயனுறும் வகையில் பிரபல பதிப்பகங்களின் புத்தகக் கண்காட்சிக்கும் புத்தக விற்பனைக்கும் விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டன.



இம்மாநாட்டுக்கான முழுமையான நிதிப்பங்களிப்பினை வழமை போன்று "சிங்கப்பூர் எஸ்டேட் கந்தையா கார்த்திகேசு அறக்கொடை நிதியம்" வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# சிவபூமி முதியோர் இல்லத்தில் நடைபெற்ற நவராத்திரி விழா

சுழிபுரம் சிவபூமி முதியோர் இல்லத்தில் நடைபெற்ற நவராத்திரி விழாவில் முதியோர்களும் இணைந்து விழாவை சிறப்பித்தனர். அம்பிகையை நோக்கி பாடல்கள் பாடி வழிபாடு மேற்கொண்டனர்.








# சிவபூமியில் நடைபெற்ற முதியோர் தினவிழா



01.10.2024 அன்று உலகம் முழுவதும் சர்வதேச முதியோர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில் சுழிபுரம் சிவபூமி முதியோர் இல்லத்தில் நடைபெற்ற முதியோர் தின நிகழ்ச்சியில் ஆன்மீக சுடர் ரிஷி. தொண்டுநாத சுவாமிகள் தனது தாயாருடன் பங்குபற்றி இருந்தார். அன்று நிகழ்ந்த நிகழ்வுகளை முதியவர்கள் ஆர்வத்துடன் கண்டு களித்தனர்.






# தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தில் நவராத்திரி உற்சவம்


எல்லாம் வல்ல பராசக்தியை துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதி எனும் முப்பெருந் தேவிகளாக வழிபட்டு வீரம், செல்வம், கல்வி என்பவற்றை வேண்டி விரதம் நோற்கும் புண்ணிய காலம் நவராத்திரி. அந்த வகையில் ஈழத்தின் தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தில் நவராத்திரி உற்சவத்தை முன்னிட்டு கும்பம் வைக்கப்பட்டு, கொலு மண்டபத்தோடு கூடிய வசந்த மண்டபத்தில் தினமும் விசேட பூசைகள் நடைபெற்று இறுதிநாள் விஜயதசமி அன்று காலை கன்னிவாழை வெட்டும் அதனைத் தொடர்ந்து மழலைகளுக்கான வித்தியாரம்ப நிகழ்வும் இடம்பெற்றது.























# பழந்தமிழரின் வியாபார நுணுக்கம்

16ம் நூற்றாண்டு வாக்கில் - பரஞ்சோதி முனிவர் எழுதிய திருவிளையாடல் புராணத்திலிருந்து ஒரு பாடல் அன்றைய வணிகர்களின் தொன்மரபாய் பின்பற்றி வரும் "வியாபார மேலாண்மை" குறித்து மிகத் தெளிவாக எடுத்துரைக்கிறது.

**"புல்லிஓர் பண்டம் கொள்வார் வினவின் அப்பொருள் தம் பக்கல்,**
**இல் எனின் இனமாய் உள்ள பொருள் உரைத்து எதிர் மறுத்தும்**
**அல்லது அப் பொருள் உண்டு என்னின், விலை சுட்டி அறுத்து நேர்ந்தும் சொல்லினும் இலாபம்**
**கொள்வார் - தொன்மரபு இருக்கை சொல்வாம்"**

மளிகை கடைக்கு வாடிக்கையாளர் ஒருவர் வருகிறார், 'பச்சரிசி இருக்கிறதா?' என கடைக்காரரிடம் வினவுகிறார். வாடிக்கையாளர் கேட்ட அரிசி கடையில் இல்லாத நிலையிலும் கூட கடைக்காரர் 'இல்லை' என்று சொல்லமாட்டாராம். மாறாக, 'புழுங்கல் தான் உள்ளது' என்று சொல்லி விற்பனையைத் தொடர்வாராம். மேலும் 'பச்சரிசி இல்லை' என்று எதிர்மறையாகச் சொல்வதால் நேரவிரயம் தவிர இலாபம் என்று எதுவுமில்லையென்பதால் 'புழுங்கல் உள்ளது' என நேர்மறையாகச் சொல்லி அவரிடம் அதனை விற்க முயல்வாராம். அதே போல அவர் கேட்ட அரிசியே இருந்தால் கூட - 'இருக்கிறது' எனச் சொல்லமாட்டாராம், மாறாக 'கிலோ இத்தனை ரூபாய்' என்று உரைப்பாராம். 'பச்சரிசி இருக்கிறது' என நேரடியாகப் பதிலுரைத்தால், வாடிக்கையாளர் அடுத்து, 'என்ன விலை?' என்று கேட்பார். கடைக்காரர் 'கிலோ இத்தனை ரூபாய்' என்று பதில் சொல்லவேண்டும். அதனால் நேரம் விரயமாகும். எனவே, கேள்விக்கு விடையாக விலையையே நேரடியாகச் சொல்லிவிட்டால் நேரம் மிச்சமாகும், அந்த நேரத்தில் இன்னொரு வியாபாரத்தைக் கவனிக்கலாமல்லவா?.

இதுதான் அப்பாடல் உள்ளடக்கிய மேலாண்மைச் சூத்திரம்! நம் முன்னோர்கள் எத்தனை அறிவாளிகள் என விளங்குகிறதா? காலங்காலமாக சிறிய பெட்டிக் கடைகளிலும் சந்தைகளிலும் பின்பற்றிய நுணுக்கங்களை வியாபார மேலாண்மை படித்தவர்கள் கூட அறிந்திற மாட்டார்கள்.



**சொல்ல வேண்டியதைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் சொல்லிப் பதில் பெற வேண்டுமே தவிர - வளவளவென்று தேவையற்றதைப் பேசி காலவிரயம் செய்யாமல் வியாபாரம் செய்யப்பட வேண்டும் - என்பது நம் முன்னோர்கள் பின்பற்றிய நுட்பங்களில் முதன்மையானது.**

# சிவபூமியில் நடைபெற்ற ஆசிரியர் தின விழா

கோண்டாவில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலை ஆசிரியர் தின விழா 04.10.2024 அன்று சிறப்புற நடைபெற்றது. மாணவச் செல்வங்கள் தமக்கு அன்புடனும் அர்ப்பணிப்புடனும் சேவை செய்யும் பேரன்புக்குரிய ஆசிரியர்களுக்கு மலர் மாலைகள் அணிவித்தும் பரிசில்கள் வழங்கியும் தமது அன்பினை வெளிப்படுத்தினர்.









# பண்பாட்டு விழுமிய போட்டிகளில் பங்குபற்றிய சிவபூமி மாணவர்கள்

கோண்டாவில் சிவபூமி மனவிருத்தி பாடசாலையில் நவராத்திரி விழாவை முன்னிட்டு மாணவர்களுக்கான சில பண்பாட்டு ரீதியான போட்டிகள் நடைபெறுகின்றன. அந்த வகையில் கோலம் போடும் போட்டி, மாலை கட்டும் போட்டி மற்றும் தோரணம் பின்னும் போட்டி என்பன நடைபெற்றன. அதில் மாணவச் செல்வங்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு தமது அதீத திறமையினை வெளிப்படுத்தினர்.









# இலண்டனில் செஞ்சொற்செல்வருக்கு கௌரவம்




இலண்டனில் சர்வதேச இந்து இளைஞர் பேரவையால் உலக சைவ தொண்டர் "கலாநிதி ஆறுதிருமுருகன்" ஐயா அவர்களுக்கு ஈலிங் அருள்மிகு கனகதுர்க்கை அம்மன் ஆலய மண்டபத்தில் 13.10.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00மணி முதல் இரவு 10மணி வரை கௌரவ நிகழ்வு வெகு சிறப்பாக நடைபெற்றது. பெருந்தொகையானோர் கலந்து சிறப்பித்தார்கள்.






# தேசிய மட்டத்தில் சாதிக்கும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

20.10.2024 அன்று இடம்பெற்ற அகில இலங்கை தேசிய மட்ட தமிழ்த்தின இலக்கிய நாடகப் போட்டியில் இரண்டாம் இடத்தினை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பெற்றுக் கொண்டது.





# விஜயதசமி மானம்பூ திருவிழாவிற்காக தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயம் வருகை தந்த மாவைக் கந்தன்

பல்லாண்டு கால வரலாற்று பாரம்பரியம் கொண்ட மானம்பூ திருவிழாவாக மாவிட்டபுரம் கந்தசுவாமி பெருமான் தனது ஆலயத்திலிருந்து புறப்பட்டு தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்திற்கு வருகை தந்து அங்கு வாழை வெட்டும் நிகழ்வில் கலந்து கொள்வது காணப்படுகிறது. அந்த வகையில் இந்த வருடத்தின் மானம்பூ திருவிழாவிற்காக விஜயதசமியை முன்னிட்டு 12.10.2024 அன்று மாவைக் கந்தசாமியார் தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்திற்கு வருகை தந்து அம்பாளின் ஆசியோடு வாழை வெட்டி பக்தர்களுக்கு அருளாசி வழங்கினார்.









# புதுப்பொலிவுடன் திறக்கப்பட்ட யாழ்ப்பாண பல்கலைக்கழக நுழைவாயில்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனது பொன்விழாவினை கொண்டாடுவதை முன்னிட்டு புதுப்பொலிவு பெற்ற பிரதான நுழைவாயிலின் 06.10.2024 அன்று யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.






இந்தப் பத்திரிகை சிவபூமி அறக்கட்டளையால் வெளியிடப்பட்டுள்ளது.(ஐப்பசி -2024) ISBN-978-955-7420-00-4